இணைப்பு -I

[911-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 494-க்கான விடையைக் காண்க.]

1977-78-ம் கல்வி ஆண்டில் இன்ஜினியரிங் கல்லூரி, பெண்கள், ஆண்கள் பாலிடெக்னிக்குகளுக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை விவரங்கள்—

(1) இன்ஜினியரிங் கல்லூரி :—

மாணவர்கள் புகுமுக (P.U.C.) தேர்வில் அல்லது அதற்குச் சமமானத் தேர்வில் படித்த பாடங்களில், கணிதத்திற்கு 100 மார்க்கும், பௌதீகம், இரசாயனம் இவ்விரு பாடங்களுக்கும் சேர்த்து 100 மார்க்கும் ஆக மேற்படிச் சொன்ன 200 மார்க்குகளும் அடித்தள பாட மார்க்குகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மற்றும் நேர்முகத் தேர்விற்கு 75 மார்க்கும், கொடுக்கப்பட்டு, மொத்தம் 275 மார்க்குக்கு, மாணவர்கள் வாங்கிய மார்க்குகளை கணிப்பொறி (computer) மூலம் வரிசைப்படுத்தி மார்க் தகுதியின் அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பிற்பட்ட வகுப்பினருக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் 31 சதவீதம், 18 சதவீதமும் முறையே ஒதுக்கப்பட்டுள்ளன.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(2) பெண்கள், ஆண்கள் பாலிடெக்னிக்—

உயர்நிலைப் பள்ளியில் படித்த மாணவர்கள் இறுதியாண்டுத் தேர்வில்:

(1) கோர் சயன்ஸில் குறைந்தது 40 சதவீதம்.

(2) அல்ஜீப்ரா மற்றும் ஜியாமெட்டரி, பௌதீகம், என்ஜினியரிங் போன்ற விருப்பப்பாடங்களில் ஏதேனும் ஒன்றில் குறைந்தது 40 சதவீதமும், மேற்கண்ட இரண்டிலும் சேர்ந்து மொத்தம் 100 மதிப்பெண்களுக்குக் குறையாமலும் பெற்றிருக்க வேண்டும்.

தொழில் நுட்பப் பள்ளியில் படித்த மாணவர்கள் :—

(1) கணிதத்தில் 40 சதவீதமும்,

(2) பெளதீகம், தொழில் நுட்பப் பாடங்களில் 40 சதவீதமும், மேலும், இவ்விரு தொகுதிகளின் மதிப்பெண்கள் கூடுதல் 100-க்குக் குறையாமல் இருக்கவேண்டும். மேற்கண்ட தேர்வுகளில், குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் மாணவ, மாணவியர் வாங்கியுள்ள மார்க்கின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் முறையே 31 சதவீதமும், 18 சதவீதமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS